**கூடுதல் மாவட்ட  உரிமையியல் நீதிமன்றம்,**
**திருப்பூர்.**
**முன்னிலை : திரு.K.R கண்ணன், பி.ஏ.,பி.எல்.,**
**(J.O.CODE : TN01220)**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்.**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ), திருப்பூர்.**
**2024–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07 ஆம் நாள் புதன்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2055, சோபகிருது வருடம், தைத் திங்கள் 24 ம் நாள்**

**<u>இடைக்கால மனு எண்.141/2023</u>**
**<u>அசல் வழக்கு எண்.212/2020</u>**

1. எம். சின்னப்பன்

.....மனுதாரர்/ வாதி

/எதிர்/

1. சி. ஜெகநாதன்

... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

2. சி. சுந்தரராஜ்

3. சி. விஸ்வநாதன்

4. ஏ. ஜெயலட்சுமி

5. வி. சௌந்தரம்

...உத்தேச தரப்பினர்கள்/ 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்

இம்மனு என் முன்பாக 24.01.2024 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. கார்த்திகேயன், B.Com., B.L., அவர்கள் ஆஜராகியும்,  4 மற்றும் 5 ஆம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்  திரு. ஆர். ராமசாமி., M.A., M.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இதுநாள்வரை பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

இந்த மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை I விதி 10ன் படி தாக்கல் செய்யப்பட்டு தாவாவில் 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை 2 முதல் 5 பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்:**

i) தாவா வாதி, இந்த மனுவின் மனுதாரர். தாவாச்சொத்துக்கள் மனுதாரரின் மனைவி பார்வதியம்மாளுக்கு பாத்தியப்பட்டதாகும். அவர் உயிருடன் இருக்கும் போது பதிவு செய்யப்படாத உயிலை மனுதாரர் பெயரில் ஏற்படுத்தியுள்ளார். மனுதாரரரின் மனைவி பார்வதியம்மாள் இறந்த பிறகு, அவர் ஏற்படுத்திய உயில் நடைமுறைக்கு வந்து மனுதாரர் தாவாச்சொத்துக்களை அடைந்து சுவாதீன அனுபவத்தில் உள்ளார். அதனால் வாதி தாவாவில் விளம்புகை மற்றும் இதர பரிகாரங்களை 1ம் பிரதிவாதிக்கு எதிராக கோரியுள்ளார்.

ii) 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் / உத்தேச தரப்பினர்கள் இறந்து போன பார்வதியம்மாளின் வாரிசுதாரர்கள். தாவாவில் முழுமையான சரியான தீர்வு ஏற்படவேண்டி 2 முதல் 5 பிரதிவாதிகளை தாவாவில் அவசிய தரப்பினர்களாக சேர்க்க வேண்டி மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளதால் மனுவில் கோரியுள்ளபடி மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்று வாதுரைக்கப்பட்டுள்ளது.

3) தாவாவில் 1 ஆம் எதிர்மனுதாரர் தோன்றா தரப்பினராக இருப்பதால் 1ம் எதிர்மனுதாரருக்கு இந்த மனுவில் அறிவிப்பு அனுப்ப வேண்டிய

அவசியம்இல்லை என்று 10.04.2023 ஆம் தேதி உத்தரவு ஏற்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டு ஆஜர் ஆகாமல் தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளார். 3 எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி மனுவில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்று மேற்குறிப்பு 31.10.2023 ஆம் தேதி ஏற்படுத்தியுள்ளார்.

4. 4 **மற்றும் 5 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்** :

I) மனு பொய்யானது. அது சட்டப்படியும், நியாப்படியும் செல்லத்தக்கதல்ல.

ii) மனுதாரர்களின் மனுவின் பிரமாண வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் சட்டத்தின் முன்பு நிலைநிற்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் ஒத்துக்கொண்டுள்ள சங்கதிகள் தவிர, ஏனைய சங்கதிகள் அனைத்தையும் மனுதாரர்களே நிரூபிக்கக் கடமைப்பட்டவர்கள் ஆவார்.

iii) மனுவில் 1 முதல் 3 பாராவில் கண்டுள்ள சங்கதிகளை எதிர்மனுதாரர்கள் மறுக்கிறார்கள். மனுதாரர்/வாதி தரப்பில் 1ம் எதிர்மனுதாரர்க்கு எதிராக மட்டுமே முதலில் தாவாவை தாக்கல் செய்து உள்ளார். மேற்படி தாவாவில் மனுதாரர்/ வாதிக்கு அவருடைய மனைவி பார்வதியம்மாள் 10.02.2006 ஆம் தேதியில் ஒரு உயில் சாசனம் எழுதி வைத்து உள்ளதாகவும்,

உயில் சாசனம் எழுதி வைத்த பார்வதியம்மாள் 21.08.2006 ஆம் தேதியில் இறந்துவிட்டதாகவும், உயில் சாசனப்படி மனுதாரர்/வாதி சொத்தை அடைந்து விட்டதாகவும் கூறியுள்ளது தவறானதாகும்.

iv) பார்வதியம்மாள் உயிருடன் இருந்த காலத்தில் யாருக்கும் எந்த ஒரு உயில் சாசனமும் எழுதி வைக்கவில்லை. அவர் உடல்நலம் சரியில்லாமல் இருந்து வந்தார். மனுதாரர்/வாதி பார்வதியம்மாளை விட 10 வயதுக்கு மேல் மூத்தவர். அதனால் பார்வதியம்மாள் ஏதாவது உயில் சாசனம் எழுதி வைக்க வேண்டும் என்று விருப்பப்பட்டு இருந்தால் அவருடைய வாரிசுகள் பெயருக்கு உயில் சாசனத்தை எழுதி வைத்து இருப்பார். ஆனால் அவரை விட 10 வயதுக்கு மேல் அதிக வயதுள்ள அவருடைய கணவர் பெயருக்கு மட்டும் ஒரு உயில் சாசனத்தை எழுதி வைத்தார் என்பது பொய்யான சங்கதியாகும். மேற்படி உயில் சாசனம் மனுதாரர்/வாதி மற்றும் 1ம் எதிர்மனுதாரரால் மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணமாகும்.

v) உயில் சாசனத்தை மனுதாரர்/வாதி மற்றும் 1ம் எதிர்மனுதாரர் ஜெகநாதன் மற்றும் உயில் சாசனத்தில் சாட்சி கையொப்பம் போட்டு உள்ளதாக கூறும் நபர்களை வைத்து மோசடியாக உயில் சாசனத்தை அவர்கள் தயார் செய்து இருக்க வேண்டும். மேற்படி உயில் சாசனம் மோசடியானது. மேலும் உயில் சாசனம் 2020 ஆம் ஆண்டில் மோசடியாக தயாரிக்கப்பட்ட ஒன்றாகும். மனுதாரர்/வாதியும் 1ம் எதிர்மனுதாரரும் கூட்டு சதி செய்து உயில் சாசனத்தை

உருவாக்கி உள்ளதால் தான் வழக்கு தாக்கல் செய்யும் போது பார்வதியம்மாளின் வாரிசுகள் அனைவரையும் கட்சி சேர்க்காமல் வழக்கை 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மட்டும் வாதி தாக்கல் செய்துள்ளார்.

vi) தற்போது 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை வழக்கில் கட்சி சேர்க்க வேண்டும் என்று கோரி மனு தாக்கல் செய்து உள்ளது சட்டப்படி தவறானதாகும். வழக்கை தாக்கல் செய்யும் போதே உரிய தரப்பினர்களை சேர்க்காமல் வழக்கை தாக்கல் செய்து உள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும். மனுவிற்கு மனு மூலம் எதுவும் ஏற்படவில்லை. மனு கொண்டு வந்திருக்கும் நிலையில் நிலைக்கத்தக்கதல்ல. அதனால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று வாதுரைக்கப்பட்டுள்ளது.

5. இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை மற்றும் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6)** தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,

i) மனுதாரர் கோரியவாறு மனு அனுமதிக்கப்பட வேண்டுமா?

7. **<u>தீர்வு :–</u>**

i) இந்த மனுவின் மனுதாரர் தாவாவில் வாதி. 1ம் எதிர்மனுதாரர் தாவாவில் 1ம் பிரதிவாதி. 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் இறந்து போன மனுதாரரின் மனைவியான பார்வதியம்மாளின் வாரிசுதாரர்கள். 4, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ii) கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர், வாதி தாவாவில் இரண்டாவது பட்டியலிட்ட சொத்துத்தான் 10.02.2006 ஆம் தேதிய உயிலின் படி சரியான சொத்து விவரம் என்று விளம்புகை செய்யக் கோரியும் 'பி' பட்டியலிட்ட தாவாச் சொத்து வாதிக்கு உள்ள உரிமையை விளம்புகை செய்யக்கோரியும் அதன் தொடர்ச்சி பரிகாரமாக 'பி' பட்டியலிட்ட சொத்தில் வாதியின் சுவாதீன அனுபவத்தை பிரதிவாதி எந்த ஒரு இடைஞ்சலோ, இடையூறோ செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை கோரியுள்ளார்.

iii) கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர், தாவா 'பி' பட்டியலிட்ட சொத்து வாதிக்கு அவருடைய மனைவி 10.02.2006 ஆம் தேதி ஏற்படுத்திய உயிலின் படி பாத்தியப்பட்ட சொத்து என்று வாதுரைத்தார். வாதியின் மனைவி இறந்த பிறகு தாவாச்சொத்துக்கள் உயிலின் அடிப்படையில் வாதிக்கு பாத்தியப்பட்டு அவருடைய சுவாதீன அனுபவத்தில் உள்ளதாக வாதுரைத்தார். வாதியின் மனைவி இறந்து போய்விட்டதால் இறந்து போன அவருடைய மனைவியின் வாரிசுதாரர்களான உத்தேச தரப்பினர்கள் தாவா பரிகாரங்களை பொறுத்து அவசிய தரப்பினர்கள் என்பதால் மனுவை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

iv) கற்றறிந்த 4 , 5 எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர், மனுவை கடுமையாக ஆட்சேபனை செய்து பார்வதியம்மாள் உயிரோடு இருக்கும் பொழுது எந்த ஒரு உயிலும் எழுதி வைக்கவில்லை என்றும், அவர் உடல்நிலை

சரியில்லாமல் இருந்தார், மனுதாரர் பார்வதியம்மாளை விட 10 வயது மூத்தவர் என்பதால் மனுதாரர் பேரில் பார்வதியம்மாள் உயில் எழுதியிருக்க மாட்டார் என்று வாதுரைத்தார். உயில் சாசனம் மோசடியாக, வாதியால் தயார் செய்யப்பட்டுள்ளது என்றும், 2 முதல் 5 உத்தேச தரப்பினர்களை தாவா தாக்கல் செய்யும் போதே தாவாவில் சேர்க்கத்தவறி, தற்சமயம் கால தாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு சட்டப்படி தவறு என்பதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

v) கற்றறிந்த மனுதாரர் மற்றும் கற்றறிந்த 4 , 5 எதிர்மனுதாரர்கள் வழக்கறிஞரின் வாதிங்கள், வழக்கு கோப்பு ஆகியவை பரிசீலனை செய்யப்பட்டது.

vi) 2 முதல் 5 உத்தேச தரப்பினர்கள் இறந்து போன பார்வதியம்மாளின் வாரிசுதாரர்கள் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதி. வாதியின் வழக்குரைப்படி தாவா 'பி' பட்டியலிட்டச் சொத்து இறந்து போன பார்வதியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்று வாதுரைக்கப்பட்டது. பார்வதியம்மாள் உயிரோடு இருக்கும் போது வாதியின் பெயரில் ஏற்படுத்திய விருப்புறுதி ஆவணத்தின் அடிப்படையில் தாவா 'பி' பட்டியலிட்ட சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக்கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கேட்டு வாதி தாவாவை தாக்கல் செய்துள்ளார்.

vii) ஆனால் 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் இறந்து போன பார்வதியம்மாள், உயிருடன் இருந்த போது தாவா 'பி' பட்டியலிட்ட சொத்தை பொறுத்து விருப்புறுதி ஆவணம் ஏற்படுத்தவில்லை என்றும், பார்வதியம்மாள் வயதானவர், உடல்நிலை சரியில்லாமல் இருந்து வந்தார். வாதி பெயரில் மட்டும் தாவா 'பி' பட்டியலிட்ட சொத்தை பொறுத்து பார்வதியம்மாள் விருப்புறுதி ஆவணம் ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. இந்த சங்கதிகளை இந்த மனுவின் மூலம் தீர்மானம் செய்ய முடியாது. வாதி வாதுரைத்துள்ள படி பார்வதியம்மாள் உயிருடன் இருந்த போது வாதி பெயருக்கு விருப்புறுதி ஆவணத்தை ஏற்படுத்தினரா என்பதை சாட்சிகளின் சாட்சியம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில்தான் முடிவு செய்ய முடியும். இந்த வழக்கின் உத்தேச தரப்பினர்கள் இறந்து போன பார்வதியம்மாளின் வாரிசுதாரர்கள். தாவா 'பி' பட்டியலிட்ட சொத்து இறந்து போன பார்வதியம்மாளுக்கு பாத்தியப்பட்டது. ஆகையால் 2 முதல் 5 உத்தேச தரப்பினர்கள் தாவாவிற்கு சரியான மற்றும் அவசிய தரப்பினர்கள் என்பதாலும், தாவா 'பி' பட்டியலிட்ட சொத்தைப் பொறுத்து வாதி பார்வதியம்மாள் ஏற்படுத்திய உயிலின் அடிப்படையில் வாதி உரிமை கோருவதாலும், 4, 5 பிரதிவாதிகள் பார்வதியம்மாள் உயிலை ஏற்படுத்தவில்லை என்று மறுப்பதால் 2 முதல் 5 உத்தேச தரப்பினர்களை தாவாவில் தரப்பினர்களாக சேர்த்து அவர்களுடைய ஆட்சேபனைகளை எதிர்வழக்குரையின் மூலம் பெற்று பரிசீலனை செய்துதான்

வாதி தாவாவில் கோரியுள்ள பரிகாரங்களை பொறுத்து சரியான முடிவுக்கு நீதிமன்றம் வர முடியும் என்பதால், 2 முதல் 5 உத்தேச தரப்பினர்கள் தாவாவிற்கு சரியான மற்றும் அவசிய தரப்பினர்கள் என்று முடிவு செய்து நீதியின் நலன் கருதியும் தாவாவில் சரியான தீர்வு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக மனு செலவுத்தொகையின்று அனுமதிக்கப்படுகிறது.

9. முடிவில், மனு அனுமதிக்கப்பட்டு 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தாவாவிற்கு சரியான மற்றும் அவசிய தரப்பினர்கள் என்று உத்தரவிட்டு, 4, 5 எதிர்மனுதாரர்கள் எதிருரை மூலம் ஏற்படுத்தியுள்ள ஆட்சேபனைகளை எதிர்வழக்குரையாக தாக்கல் செய்ய அனுமதிக்கப்பட்டு அந்த எதிர்வாதங்கள் தாவாவில் விடை காணப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2024–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07–ம் நாள் புதன்கிழமை அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2024.02.07 17:42:22 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி(மு.கூ.பொ),
திருப்பூர்.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றவாணங்கள் :–</u>** இல்லை.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றவாணங்கள் :–</u>** இல்லை.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2024.02.07 17:42:42 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),
திருப்பூர்.

**<u>Fair Order</u>**

I.A.No.141/2023 in
O.S.No.212/2020
Dated: 07.02.2024
ADMC – Tiruppur

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**திருப்பூர்.**
**முன்னிலை : திரு.K.R கண்ணன், பி.ஏ.,பி.எல்.,**
**(J.O.CODE : TN01220)**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்.**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ), திருப்பூர்.**
**2024–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07 ஆம் நாள் புதன்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2055, சோபகிருது வருடம், தைத் திங்கள் 24 ம் நாள்**

**இடைக்கால மனு எண்.141/2023**
**அசல் வழக்கு எண்.212/2020**

எம். சின்னப்பன், த/பெ. மாரப்பன், வசிப்பிடம், கதவு எண். 50/44, ஆரம்பப்பள்ளி 2 வது வீதி, கருவம்பாளையம், திருப்பூர்.

.....மனுதாரர்/ வாதி

/எதிர்/

1. சி. ஜெகநாதன், த/பெ. சின்னப்பன், வசிப்பிடம் 2/585 பி, ஹரே ராமா ஹரே கிருஷ்ணா நகர், 6 வது வீதி, மங்கலம் ரோடு, திருப்பூர்.

... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

2. சி. சுந்தரராஜ், த/பெ. சின்னப்பன், வசிப்பிடம் க.எண். 2/922, எஸ்.ஆர். நகர் வடக்கு, மங்கலம் ரோடு, பெரியாண்டிபாளையம் அஞ்சல், திருப்பூர் – 641687.
3. சி. விஸ்வநாதன், த/பெ. சின்னப்பன், வசிப்பிடம் க.எண். 47/18, ஆரம்பப்பள்ளி வீதி கிழக்கு, புளியமரத்தோட்டம், கருவம்பாளையம், திருப்பூர்– 641604.
4. ஏ. ஜெயலட்சுமி, க/பெ. அருணாசலம், த/பெ. சின்னப்பன், வசிப்பிடம், க.எண். 19/46, ராயபுரம் மெயின் ரோடு, வள்ளுவர் காலனி எதிரில், திருப்பூர் – 641601.
5. வி. சௌந்தரம், க/பெ. லேட் வேலுச்சாமி, த/பெ. சின்னப்பன், வசிப்பிடம் க.எண். 17/24, சாயப்பட்டறை வீதி, சூசையபுரம், ராயபுரம், திருப்பூர் – 641601.

...உத்தேச தரப்பினர்கள்/ 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்

இந்த மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை I விதி 10ன் படி தாக்கல் செய்யப்பட்டு தாவாவில் 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை 2 முதல் 5 பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் : 08.12.2022.

இம்மனு என் முன்பாக 24.01.2024ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. கார்த்திகேயன், B.Com., B.L., அவர்கள் ஆஜராகியும், 4 மற்றும் 5 ஆம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஆர். ராமசாமி., M.A., M.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இதுநாள்வரை பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## இறுதி உத்தரவு

1. இந்த மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.
2. 4, 5 எதிர்மனுதாரர்கள் எதிருரை மூலம் ஏற்படுத்தியுள்ள ஆட்சேபனைகளை தாவாவில் எதிர்வழக்குரையாக தாக்கல் செய்ய அனுமதிக்கப்படுகிறது.
3 செலவுத் தொகை இல்லை.

2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07-ம் நாள் புதன்கிழமை இன்று என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இதனடியில் வைக்கப்பட்டது.

K R KANNAN Digitally signed by K R KANNAN
Date: 2024.02.07 17:42:31 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (முகூபொ),
திருப்பூர்.

**Final Order**

I.A.No.141/2023 in

O.S.No.212/2020

Dated: 07.02.2024

ADMC – Tiruppur